# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 141 | செவ்வாய்க்கிழமை Tuesday | 18.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# விவசாய கடன்கள் ரூ.75 ஆயிரம் வரை முழுமையாக தள்ளுபடி

## முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



தமிழக சட்டசபையில் முதல் அமைச்சர் விஜய் விதி எண் 110–கீழ் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:ரூ.75 ஆயிரம் கடன் வாங்கியிருந்தால் 100 சதவீதம் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும். ரூ.1 லட்சம் வரை கடன் வாங்கினாலும் அதிகபட்சமாக ரூ.75 ஆயிரம் வரை பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும். தவெக அரசு பல்வேறு நிதி நெருக்கடிகளின் மத்தியில் பதவியேற்றாலும் விவசாய கடன்களை தள்ளுபடி செய்துள்ளது. விவசாய அமைப்புகளின் கோரிக்கைகளின் படி ரூ.75,000 வரை முழு கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது" என்றார்.

உலகில் ஜாதி, மதம், இனம், மொழி என அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டு நடைபெறும் தொழில் என்றால்,அது விவசாயத் தொழில் மட்டுமே. உலகின் ஒரு மூலையில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள், உலகின் மற்றொரு மூலையில் உள்ள மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கிறது. எந்த நாடு உழவுத் தொழிலை மதித்து,விவசாயிகளுக்கு உரிய பாதுகாப்பையும் ஆதரவையும் வழங்குகிறதோ, அந்த நாட்டில்தான் மக்கள் வளமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடியும். தமிழக வெற்றிக் கழக அரசு, பல்வேறு "நிதி நெருக்கடிகளின் மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றாலும்," பதவியேற்ற 15 நாட்களுக்குள், விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க கடந்த 25.05.2026 அன்று, குறு, சிறு மற்றும் இதர விவசாயிகள் பெற்றிருந்த பயிர்க்கடனில் 50,000 ரூபாய் வரையிலான கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது

.அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் பல்வேறு விவசாய அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து,"நிதி நெருக்கடியான சூழ்நிலையிலும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மட்டும்" கருத்தில் கொண்டு, குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிகளுக்கு 50,000 ரூபாய் வரை முழுத் தள்ளுபடி செய்ய அறிவிக்கப்பட்டதை உயர்த்தி, ரூ.75,000/– வரை கடன் பெற்றவர்களுக்கு முழுத் தொகையையும், ரூ.75,000/–க்கும் மேல் கடன் பெற்றவர்களுக்கு ரூ.35,000/–மும் தள்ளுபடி செய்ய அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 14.44 இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் 5,932.23 கோடி அளவிலான கூட்டுறவு பயிர்க்கடன் தள்ளுபடி செய்து 19.06.2026 அன்று ஆணையிடப்பட்டது. இதில், 31.07.2026 வரை ரூபாய் 5,267 கோடி விடுவிக்கப்பட்டு 13.34 இலட்சம் விவசாயிகளின் கணக்கில் வரவும் வைக்கப்பட்டுள்ளது.இச்சூழ்நிலையில், மாநிலம் முழுவதுமுள்ள விவசாய சங்க அமைப்புகளின் பிரதிநிதிகள் பயிர்க்கடன் தள்ளுபடியை அதிகரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து 07.08.2026 அன்று, விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், மாண்புமிகு மூத்த அமைச்சர்கள் மற்றும் துறைச் செயலாளர்களுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், அவர்களின் கோரிக்கைகள் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது.

செலுத்தவேண்டிய தொகை

கடந்த காலங்களில் பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டாலும், அரசால் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தவேண்டிய தொகை 4–5 ஆண்டு கால இடைவெளியில் செலுத்தப்பட்டு வந்துள்ளது. 2021–ஆம் ஆண்டில் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை, 2021 முதல் 2026 வரையான காலத்தில் அரசால் 12 தவணைகளாக கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ளது

ஆனால், அந்தக் கால அவகாசம் நமது அரசுக்குத் தற்போது இல்லை. இந்திய ரிசர்வ் வங்கியின் 28.11.2025 ஆம் தேதியிட்ட கடிதத்தில், அரசு கடன் தள்ளுபடி திட்டங்களுக்கான செயல்பாட்டு நடைமுறைகளின் படி பயிர்க்கடன் தள்ளுபடிக்கான முழுத்தொகையையும், அரசானது 45 முதல் 60 நாட்களுக்குள் கூட்டுறவு வங்கிகளுக்கு முழுமையாக செலுத்த வேண்டும் என்ற வழிமுறை நடைமுறையில் வந்துள்ளது. இந்த வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு அரசின் நிதிநிலை மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட பயிர்க்கடன்களுக்குப் பின்வரும் கூடுதல் தள்ளுபடியை வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது.

மொத்தமாக 6,220 கோடி

75,000 ரூபாய் வரை பெற்றுள்ள பயிர்க்கடன்கள் 100% முழுமை யாகவும்,


75,000 ரூபாய் முதல் 1,00,000 ரூபாய் வரை பெற்றுள்ள பயிர்க்கடன்களுக்கு அதிகபட்சமாக 75,000 ரூபாய் வரையும்,

1,00,000 ரூபாய்க்கு மேல்பெற்றுள்ள பயிர்க்கடன்களுக்கு அதிகபட்சமாக 35,000 ரூபாய் வரையும் தள்ளுபடி வழங்கப்படும்.

இதன்மூலம், 75,000 ரூபாய் முதல் 1,00,000 ரூபாய் வரை பயிர்க்கடன் பெற்றுள்ள 2,38,264 விவசாயிகளுக்குத் தலா 75,000 ரூபாய் வரை தள்ளுபடி வழங்கப்படும். இதனால், ஏற்கனவே, பெற்ற தள்ளுபடித் தொகைக்கு மேலாக 40,000 ரூபாய் வரை கூடுதல் தள்ளுபடி பெறும் வாய்ப்பு ஏற்படும். இந்தக் கூடுதல் பயிர்க்கடன் தள்ளுபடியால் அரசுக்கு சுமார் ரூபாய் 953.06 கோடி கூடுதல் நிதிச்சுமை ஏற்படும், இருந்தாலும், தமிழக விவசாயிகளின் நலனில்தான் நமது நலன் உள்ளது என்று கருதி சுமார் 13.34 இலட்சம் விவசாயி களுக்கு, மொத்தமாக 6,220 கோடி ரூபாய் பயிர்க்கடன் தள்ளுபடியை இந்த அரசு வழங்குகிறது.

# துறை சார்ந்த கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்கவில்லை

## எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு



சென்னை:

"தவெக அரசில் அந்தந்தத் துறை அமைச்சர்கள் அந்தந்த துறைக்கான பதிலைச் சொல்ல மறுக்கிறார்கள். உதாரணத்துக்கு சட்டம் ஒழுங்கு, போதைப் பொருள் தடுப்பைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம். இதற்கு முழுப் பொறுப்பேற்க வேண்டியவர் யார் என்பது மக்களுக்குத் தெரியும். அந்த அமைச்சர் இன்றைக்கு அவைக்கு வரவே இல்லை. அதற்கான பதிலையும் அவர் சொல்லவே இல்லை," என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்ததும், உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களிடம் பேசுகையில், "கோவையில் மாணவர் அமுதன் 10 நாட்களுக்கு முன்பு போதைப்பொருள் கடத்துகின்ற கும்பலைப் பற்றி காவல்துறையிடம் விவரங்களையெல்லாம் கூறியதற்காக காவல்துறை என்ன செய்திருக்க வேண்டும்? சரியான நடவடிக்கை எடுத்து, போதைப் பொருளைப் பறிமுதல் செய்திருக்க வேண்டும்.

அந்த மாணவன் அமுதன் யார் மீது புகார் கொடுத்தாரோ, யார் போதைப்பொருள் கடத்துகிறார்கள், யார் விநியோகம் செய்கிறார்கள் என்று கூறினாரோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, அந்த போதைப்பொருள் விநியோகம் செய்கின்ற கும்பலை அழைத்து, ₹இந்த அமுதன்தான் உங்களைப் பற்றிய அனைத்து விவரங்களையும் கொடுத்திருக்கிறார்' என்று கூறியதனால், அந்த போதைப் பொருள் விநியோகம் செய்யும் கும்பல் அமுதனை கிட்டத்தட்ட 20 பேரைக் கொண்ட ஒரு கும்பலாகச் சேர்ந்து அடித்து, 5 நாட்களுக்கு முன்பு படுகொலை செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி, திருவொற்றியூரில் இதேபோல தனுஷ் என்ற மாணவர், 20 பேர் கொண்ட ஒரு கும்பலால் தாக்கப்பட்டு பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இப்படித் தொடர்ந்து போதைப்பொருளால் இன்றைக்குப் பல்வேறு சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன.

என்று இந்த அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதற்காக இன்றைக்கு நாம் மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்களும் சட்டமன்றத்தில் அரசின் கவனத்தை ஈர்த்துப் பேசியிருக்கிறோம். ஆனால், இதற்கெல்லாம் எந்தவிதமான ஒரு சரியான பதிலும் இந்த அரசிடம் இல்லை. மாறாக எங்கள் மீது மீண்டும் குற்றச்சாட்டு வைக்கிறார்கள். தங்களது ஆட்சியில் என்ன செய்தீர்கள் என்று ஒரு தெளிவான விளக்கம் இல்லாமல், எங்கள் மீது மீண்டும் பழியைப் போடுகின்ற வழக்கத்தையே இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமன்றி, நான் பலமுறை இந்த மூன்று மாதங்களாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். எந்தத் துறைக்கு யார் அமைச்சர் என்பதே சரியாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், இந்த அரசில் அந்தந்தத்துறை அமைச்சர்கள் அந்தந்த துறைக்கான பதிலையே சொல்ல மறுக்கிறார்கள். இன்றைக்கு சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம், போதைப் பொருள் தடுப்பைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம். இதற்கு முழுப் பொறுப்பேற்கவேண்டியவர் யார் என்பது மக்களுக்குத் தெரியும். அந்த அமைச்சர் இன்றைக்கு அவைக்கு வரவே இல்லை. அதற்கான பதிலையும் அவர் சொல்லவே இல்லை. இதையெல்லாம் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு வெளிநடப்பு செய்திருக்கிறோம்." என்றார்.

# பாஜகவின் தேசிய துணைத்தலைவர்களாக 13 பேர் நியமனம்



பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் நிதின் நபின் தலைமையில் செயல்படவுள்ள தேசிய துணைத் தலைவர்கள், பொது செயலாளர்கள் மற்றும் தேசிய செயலாளர்கள் உள்ளிட்ட குழு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் பொருளாளர்கள், மத்திய அலுவலக பொறுப்பாளர்கள் மற்றும் பல்வேறு மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய உயர் பதவிகளுக்கு பொறுப்பாளர்களை பாரதிய ஜனதா கட்சி நியமித்துள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அம்மாநிலத்தின் பொதுச் செயலாளராக முன்னாள் மத்திய அமைச்சர் ஸ்மிருதி இராணி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை இணை அமைச்சராக இருந்த பியூஷ் கோயல், கட்சியின் தேசிய பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பாஜக–வின் தேசிய துணைத் தலைவர்களாக 13 பேர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வசுந்தரா ராஜே சிந்தியா, தீரத் சிங் ராவத்,ராம் மாதவ்,பைஜ்யந்த் ஜெய் பாண்டா, டி புரந்தேஸ்வரி, ரேகா வர்மா, வர்ஷாபென் நரேந்திரபாய் தோஷி, பார்தி பிரவின் பவார், மன்பிரீத் சிங் பாதல்,லால் சிங் ஸ்ம்ரி ஆர்யா, நாகராஜா,தாரிக் மன்சூர் மற்றும் மதுசந்திர கர் உள்ளிட்ட 13 பேர் தேசிய துணைத் தலைவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பி.எல்.சந்தோஷ் தேசிய பொதுச் செயலாளராக தொடர்ந்து நீடிக்கிறார். வினாத் தாவ்டே மற்றும் ஸ்மிருதி இரானி ஆகியோர் எட்டு தேசிய பொதுச் செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக சமூக ஊடக ஒருங்கிணைப்பாளராக இருந்த அமித் மால்வியாவிற்கு பதிலாக சத்தீஸ்கரைச் சேர்ந்த தீபக் மஸ்கே அந்த பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம், அனில் பலூனி பாஜகவின் ஊடக ஒருங்கிணைப்பாளராகத் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவைச் சேர்ந்த பிரீத்தி காந்தி, டெல்லியைச் சேர்ந்த சிவானந்த் திவேதி, உத்தரகாண்டைச் சேர்ந்த அலோக் பட் மற்றும் ஹரியானாவைச் சேர்ந்த அருண் யாதவ் ஆகியோர் சமூக ஊடக ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்படுகின்றன.

கோவை சஹோதயா பள்ளிகள் கூட்டமைப்பின் சார்பாக

## கோவை நேரு விளையாட்டு அரங்கில் 10வது ஆண்டு தடகளப்போட்டிகள் நடைபெற்றது

### கோவை மாநகர காவல் ஆணையர் கண்ணன் துவக்கி வைத்தார்



கோவை சஹோதயா பள்ளிகள் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப்படும், 10-வது ஆண்டு தடகளப் போட்டி - 2026, கோவையில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில், ஆகஸ்ட்17ம்தேதிதுவங்கியது வரும் 19ம் தேதி வரை, மூன்று நாட்கள் நடைபெறும்இந்தபோட்டிகளில்கலந்துகொள்ள,

கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து 1500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்கேற்க்க உள்ளனர். இளம் விளையாட்டு வீரர்கள் தங்களின் விளையாட்டுத் திறன், ஒழுக்கம்மற்றும்போட்டி மனப்பான்மையை வெளிப்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக இந்நிகழ்வு அமைகிறது. இந்த விளையாட்டு போட்டிகளை, கோவை மாநகர காவல் ஆணையர் கண்ணன், துவக்கி வைத்தார்.

தொடக்க விழாவில் சிறப்பான முறையில் தேசியக் கொடி, ஒலிம்பிக் கொடி மற்றும் கோவை சஹோதயா பள்ளிகள் கூட்டமைப்பின் கொடிகள் ஏற்றப்பட்டன.

முக்கிய விருந்தினர்களாக சிந்தனைகவிஞர்கவிதாசன், மற்றும் பி.ஏ இன்டர்நேஷனல் பள்ளியின் முதல்வர், மகேஷ் நாராயணன்,கலந்துகொண்டு போட்டிகளை துவக்கி வைத்தனர்.பின்னர்,பல்வேறு வயதுப் பிரிவுகளுக்கான ஓட்டப்பந்தயம், களப்போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு தடகளப் போட்டிகள் நடைபெறுகின்றன. இதில் 12 வயதுக்குட்பட்டோர், 14 வயதுக்குட்பட்டோர், 17 வயதுக்குட்பட்டோர் மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்கள் தங்களின் வேகம், வலிமை, சகிப்புத்தன்மை, சுறுசுறுப்பு மற்றும் விளையாட்டு நற்பண்புகளை வெளிப்படுத்த உள்ளனர். மாணவர்களிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை வளர்ப்பதுடன், ஒழுக்கம், குழு உணர்வு, விடாமுயற்சி மற்றும் சிறப்பை நோக்கிய முயற்சி ஆகிய பண்புகளை வளர்ப்பதே இப்போட்டியின் முக்கிய நோக்கமாக அமைந்த்து.

இந்த நிகழ்ச்சியில் பிஎஸ்ஜி பப்ளிக் பள்ளியின் முதல்வர் கிரிஷ் ஈஸ்வரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டத்தில் இலக்கு மீடியாவின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான சுதந்திரதின கலைப்போட்டிகள்

தென்காசி மாவட்டத்தில் தாய்த் திருநாட்டின் 80 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவியர்களுக்கான கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி குற்றாலம், காசிமேஜர்புரத்தில் உள்ள ஸ்ரீ முருகன் மஹாலில் நடைபெற்றது. இப்போட்டிகளில் 100க்கும் மேற்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டினர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். கலைகதிரவன், பாரத் கல்விக் குழுமத்தின் சேர்மன் மோகன கிருஷ்ணன், அம்பாசமுத்திரம் கலைக் கல்லூரியின் பேராசிரியர் டாக்டர். இசக்கி, மேனாள் ஐஏஎஸ் அதிகாரி லட்சுமி காந்தன் பாரதி, ஹியூமன் ரைட்ஸ் ஆர்கனைசர் விஜிலென்ஸ் இந்திய இயக்குனர் டாக்டர் அப்துல் காதர், பாரதிய ஜனதா கட்சியின் நகரத் தலைவர் சங்கர சுப்பிரமணியன், கல்பவ்ருக்ஷா பைன் ஆர்ட்ஸ்அகாடமி நிறுவனர் தமிழ்ச்செல்வி, உடற்கல்வி ஆசிரியர் திருப்பதி, தமிழ் மாநில பட்டதாரி ஆசிரியர் முன்னேற்றக் கழகத் தலைவர்.பாரதி,விஷ்வ ரக்ஷா சீனியர் ஹோம் டாக்டர் சுகன்யா, சன் டிவி புகழ் சூரியன் எப்.எம் புகழ் நெல்லை ஜெபராஜ், சிம்மா அகாடமி இயக்குநர். நெல்லைகுமரன், திமுகமாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர், முத்துக்குமார்,

சிங்கப்பெண்கள் ரத்ததான கழக நிறுவனர் மகேஸ் மற்றும் குழுவினர், கலந்துகொண்டு சிறப்பு செய்தனர் இந்தநிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் இலக்கு மீடியாவின் நிறுவனர். சாதாரண இந்தியன். நியாஸ்அஹமத் சிறப்பாக செய்திருந்தார்.

இவ்விழாவில் பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் மற்றும் அனைத்து சமுதாய பெரியவர்களும் கலந்து கொண்டனர். போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்த விழாவிற்கான நிகழ்ச்சிகளை ஆசிரியர் ஜோசப் தொகுத்து வழங்கினார்.



## கோவையில், டி.ஜே. அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரியின் முதல் பட்டமளிப்பு விழா

### கோவை பாப்பநாயக்கன் பாளையத்தில் உள்ள மணி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது




கோவையில் செயல்பட்டு வரும் டி.ஜே.அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரியின் முதல் பட்டமளிப்பு விழா கோவை பாப்பநாயக்கன் பாளையத்தில் உள்ள, மணி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. 2021-22 முதல் 2025-26 வரையிலான கல்வியாண்டுகளில் பயின்ற 110 மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அகாடமியின் கல்விப் பயணத்தில் இந்த விழா முக்கிய மைல்கல்லாக அமைந்தது.

பட்டமளிப்பு விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ஜி. ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கினார். இந்தியாவின் முன்னணி மேடை வடிவமைப்பாளரும்,கலாச்சாரச் சிந்தனையாளரும், பத்ம பூஷண் விருது பெற்றவருமான ராஜீவ் சேதியும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வுக்கு எல். எம்.டபிள்யு. லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு மற்றும் ஜி. கே.டி. அறக்கட்டளையின் அறங்காவலர் டாக்டர் லலிதாதேவி சஞ்சய் ஜெயவர்த்தனவேலு ஆகியோர் தலைமை வகித்தனர்.

2004-ம் ஆண்டு தொடங்கப்பட்ட டி.ஜே. அகாடமி ஆஃப் டிசைன் கல்லூரி, தென்னிந்தியாவில் தனித்துவமான வடிவமைப்புக் கல்விச் சூழலை உருவாக்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. படைப்பாற்றல், துறைசார் அடிப்படை அறிவு, சூழல்சார் புரிதல் மற்றும் தொழில்துறை தேவைகளுக்கு ஏற்றகல்வி ஆகியவற்றை ஒருங்கிணைத்து மாணவர்களை உருவாக்கி வருகிறது.

தற்போது தகவல் தொடர்பு வடிவமைப்பு, தொழில்துறை வடிவமைப்பு, பயனர் அனுபவ வடிவமைப்பு, அனிமேஷன் மற்றும் திரைப்படத் தயாரிப்பு, உள்துறை வடிவமைப்பு உள்ளிட்ட பிரிவுகளில் இளநிலை வடிவமைப்புப் படிப்புகளையும், தகவல் தொடர்பு வடிவமைப்பு மற்றும் தொழில்துறை வடிவமைப்புஆகியபிரிவுகளில் முதுநிலை வடிவமைப்புப் படிப்புகளையும் அகாடமி வழங்கி வருகிறது.

இந்த முதல் பட்டமளிப்பு விழா, மாணவர்களின் கல்விச் சாதனையை கொண்டாடுவதுடன், அவர்கள் கல்விச் சூழலில் இருந்து தொழில்முறை உலகிற்குள் அடியெடுத்து வைக்கும் முக்கியமான தருணமாகவும் அமைந்தது.பட்டம்பெற்றமாணவர்கள் தங்களது கல்வித் தகுதியுடன் ஆர்வம், விமர்சனச் சிந்தனை, பரிசோதனை மனப்பான்மை, படைப்பாற்றல் மற்றும்சமூகச் சூழலைப் புரிந்துகொள்ளும் திறன் ஆகியவற்றையும் தங்களுடன் எடுத்துச் செல்கின்றனர்.



தென்காசி வனக்கோட்டம் ஆலங்குளம் வனச்சரக அலுவலக வளாகத்தில் வனசரக அலுவலர் முனிரத்தினம் தலைமையில்80வதுசுதந்திரதினதினவிழாநடைபெற்றது. நிகழ்வில்வனவர்கள்அம்பலவானன், லூமீஸ், வனகாப்பாளர் டென்சிங், சுதா,மாலதி, செல்வம், வனகாவலர் ராஜாசிந்து, சந்தனகிருஷ்ணன், சிவன் தாஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## அரசு பேருந்து இருசக்கர வாகனத்தில் மோதி ஓய்வு பெற்ற பெண் ஆசிரியர் உயிரிழப்பு



மதுரை நாகமலை புதுக்கோட்டை மதுரையில் இருந்து தேனி செல்லும் சாலையில் ஜெயராஜ்அன்னபாக்கியம் தனியார் பள்ளி அருகே அரசு பேருந்து இருசக்கர வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானதில்ஓய்வுபெற்றபெண் ஆசிரியர் உயிர் இழப்பு மேலும் அரசு பேருந்து சாலையில் ஓரத்தில் நின்றிருந்த மூன்று இருசக்கரவாகனத்தை மோதிக்கொண்டே சாலையில் வைக்கப்பட்டிருந்த தடுப்பையும் மோதி சாலை ஓரத்தில் இருந்த மரத்தில் மோதி நின்றது. மரத்தில் பேருந்து மோதிய வேகத்தால் சாலையோரம் இருந்த மின்சார கம்பிகள் அருந்து தொங்கின. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த நாகமலை புதுக்கோட்டைபோலீசார் விசாரணை மேற்கொண்டதில் இருசக்கர வாகனத்தில் வந்தவர் நாகமலை புதுக்கோ ட்டை என் ஜி ஓ காலனி சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் அமுதா 62 என்பதும் இவர் தனது இருசக்கர வாகனத்தில்சாலையில்சென்றுகொண்டிருக்கும்போது பெரியார் பேருந்து நிறுத்தத்தில் இருந்து கரிசல்பட்டிக்கு பத்துக்கு மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற TN 58 N 2256 அரசு பேருந்து மோதி விபத்துக்குள்ளானது. இதில் அமுதா சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.பேருந்தில் வந்தா பயணிகளு க்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளது. பேருந்து கட்டுப்பாட்டைஇழந்து விபத்துக்கு ள்ளானதா? அல்லது பிரேக் ஃபெயிலியர் ஆனதால் விபத்து ஏற்பட்டதாதா? அல்லது இருசக்கர வாகனத்தில் வந்தவர் திடீரென குறுக்கே வந்ததால் விபத்து ஏற்பட்டதாஎனபோலீசார் அங்கிருக்கும் சிசிடிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அரசு பேருந்து சாலையில் சென்ற இருசக்கர வாகனம் மீது மோதியதோடு சாலையின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனங்கள் மீது மோதி அரை அடி தூரத்திற்கு இழுத்துச் சென்று சாலையோர தடுப்பு மற்றும் மரத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

# தூத்துக்குடியில் கோலாகலமாக நிறைவுற்ற 5வது ஆண்டு ‘நெய்தல்’ கலைத் திருவிழா நிகழ்ச்சிக்கு தனி ரசிகர்கள் கூட்டம்” - கனிமொழி எம்.பி. பெருமிதம்



தூத்துக்குடியில் நெய்தல் நிகழ்ச்சிக்கு என்று தனி ரசிகர்கள் கூட்டம் உள்ளது. விழாவை வெற்றி பெறச் செய்த பொதுமக்கள், காவல்துறையினர், அரசுத் துறையினர் மற்றும் ஊடகங்களுக்கு நன்றி" என்று கனிமொழி எம்.பி. கூறினார்.

தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி மைதானத்தில் கடந்த 14-ஆம் தேதி தொடங்கிய 5-வது 'நெய்தல்' கலைத் திருவிழா நேற்றிரவு (ஆகஸ்ட் 16) கோலாகலமாக நிறைவுற்றது.திமுக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில் நடைபெற்ற இந்த விழாவில், கடந்த ஆண்டு புத்தகத் திருவிழாவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுத் தொகைகளும், வ.உ.சி கல்லூரி முதல்வர் வீரபாகு, நபார்டு வங்கி அதிகாரிகள் சுரேஷ் ராமலிங்கம், சதாம் உசேன் ஆகியோருக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்பி, வடக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கருணாநிதி எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவில் பங்கேற்கக் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வந்திருந்த நாட்டுப்புறக் கலைஞர் பிரசாந்த் சனிக்கிழமை உடல்நலக்குறைவால் மறைந்ததை ஒட்டி, நிறைவு விழாவில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. விழாவில் கனிமொழி எம்.பி. பேசுகையில் "தூத்துக்குடியில் நெய்தல் நிகழ்ச்சிக்கு என்று தனி ரசிகர்கள் கூட்டம் உள்ளது. புதிய கலைஞர்களின் திறமைக்கு மக்கள் அளிக்கும் கைதட்டல் அவர்களுக்குப் மிகப்பெரிய உற்சாக மருந்து. இந்த விழாவை வெற்றி பெறச் செய்த பொதுமக்கள், காவல்துறையினர், அரசுத் துறையினர் மற்றும் ஊடகங்களுக்கு நன்றி" என்றார்.

முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் பேசுகையில், "மண்ணின் கலைகள் அழிந்துவிடக் கூடாது, அடுத்ததலைமுறைக்குக் கொண்டுசெல்லவேண்டும் என்ற கனிமொழி எம்.பியின் நோக்கம் நிறைவேறி வருகிறது. அனைத்துத் தரப்பு மக்களும்மனமகிழ்ச்சியோடு இதில் பங்கேற்றுள்ளனர்" என்றார். மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில் "தூத்துக்குடியையும் கடலையும் எப்படிப் பிரிக்க முடியாதோ, அதேபோல் நெய்தல் நிகழ்ச்சியையும் மக்களையும் பிரிக்க முடியாது. 2 வயதுக் குழந்தை முதல் 80 வயது முதியவர்கள் வரை குடும்பத்தோடு கலந்துகொண்டு மகிழ்ந்ததைக் காண முடிந்தது" என்றார். தமிழ்நாடு மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்துகொண்டனர். கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், பறையாட்டம், பொய்க்கால் குதிரை உட்பட 20-க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளுடன், குஜராத் மாநிலத்தின் 'சித்தி கோமா' நடனமும் இடம்பெற்றது.

தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளுக்காக 30-க்கும் மேற்பட்ட உணவு அரங்குகளும், நேரடி உற்பத்தியாளர்களின் சுயதொழில் பொருட்களின் விற்பனை அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (17.08.2026) கேட்டறிந்தார்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் அலுவலக வளாகத்தில் 80வது சுதந்திரதினவிழாவை முன்னிட்டு ஆலங்குளம்ஒன்றியசேர்மன்எம்திவ்யாமணிகண்டன் தலைமையேற்று மூவர்ண தேசியகொடியை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார். நிகழ்வில் ஆலங்குளம் காவல் ஆய்வாளர் சாகுல்ஹாமீது மற்றும் அரசு அலுவலர்கள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பஞ்சாயத்து தலைவர்கள் உள்பட பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்,மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (17.08.2026) நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை,ஆதார்கார்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தார்சாலை, மகளிர் உரிமைத்தொகை,மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, வேலைவாய்ப்பு, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 390 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

நேற்றைய தினம், நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஈரோடு, திண்டல் பகுதியைச் சேர்ந்ததிரு.குப்புசாமி அவர்கள் அளித்த மனுவின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு,மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.9,500/- மதிப்பிலான சக்கர நாற்காலியினை வழங்கினார். மேலும், ஈரோடு, பி.பி.அக்ரஹாரம் பகுதியைச் சேர்ந்த திரு.சிக்கந்தர் அவர்களுக்கு தொழில்மேற்கொள்வதற்காக ரூ.16,666/- மானியத்துடன்கூடிய கடனுதவிக்கான ஆணையினையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) ரமேஷ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன், மாவட்ட வழங்கல் அலுவலர் மகேஸ்வரி, சமூக நீதித்துறை அலுவலர் சுடலைமணி, அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதுப்பட்டி இந்து திருமுருகன் நடுநிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் வட்டாரம் புதுப்பட்டி இந்து திருமுருகன் நடுநிலைப் பள்ளி வளாகத்தில் 80-வது சுதந்திர தின விழா சிறப்பாகநடைபெற்றது.பள்ளி செயலர் சௌந்தரி தலைமையில் நடைபெற்ற விழாவில், ஊராட்சி மன்ற தலைவர் பால் விநாயகம், தொழிலதிபர் புதுப்பட்டி கணேசன் ஆகியோர் முன்னிலைவகித்தனர்.பள்ளி தலைமை ஆசிரியர் எல். பாஸ்கர் வரவேற்று, சுதந்திர தின சிறப்பு ரையாற்றினார். விழாவில் பாரத் ஸ்கேன் நிறுவனர் டாக்டர் இம்மானுவேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து, பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் சந்திரா,ராஜேஸ்வரி, அருள்பேபி, ரேவதி கலா, திருமால், சசிக்குமார், சீனிவாசன், ஆட்டோஓட்டுநர் கணேசன், கோயில் மணி, சுபிசன் உள்ளிட்ட பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர்.

விழாவின் நிறைவில் உதவி ஆசிரியர்கள் பாபு துரை, தமிழ்கனி ஆகியோர் நன்றியுரை வழங்கினர்.

# 21 நாட்களில் 5,000 குடும்பங்களை அப்புறப்படுத்துவதா? மாற்று ஏற்பாடுகள் மற்றும் மறுவாழ்வு உறுதி செய்யாமல் கட்டாய வெளியேற்றம் கூடாது- தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு கண்டனம்



ஆம்பூர் பாலாற்றங்கரையோர குடியிருப்புகளில் நீண்டகாலமாக வசித்து வரும் 5,000-க்கும் மேற்பட்ட குடும்பங்களை 21 நாட்களுக்குள் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக வெளியாகியுள்ள தகவலுக்கு தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துதமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் தூத்துக்குடி சம்சுதீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆம்பூர் பாலாற்றங்கரையோர குடியிருப்புகளில் பல ஆண்டுகளாக வசித்து வரும் 5,000-க்கும் மேற்பட்ட குடும்பங்களை வெறும் 21 நாட்களுக்குள் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக வெளியாகியுள்ள செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

தலைமுறைகளாக ஒரு பகுதியில் வசித்து வரும் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வீடு, வாழ்வாதாரம், குழந்தைகளின் கல்வி, சமூக உறவுகள் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் திடீரென வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. அகற்றுவது எளிது; ஆனால் அந்த மக்களின் வாழ்க்கையை மீண்டும் உருவாக்குவது யார்? என்ற கேள்வி எழுகிறது.

நீர்நிலை அல்லது அரசு நிலம் தொடர்பான சட்டப்பூர்வமான பிரச்சினைகள் இருந்தாலும், அங்கு பல ஆண்டுகளாக வசித்து வரும் மக்களை ஒரே நடவடிக்கையில் வீடற்றவர்களாக மாற்றுவது தீர்வாகாது. மக்களின் வாழ்வுரிமையையும் மனிதநேயத்தையும் கருத்தில் கொண்டு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.மேலும் கூட்டமைப்பின் கோரிக்கைகள் 21 நாள் காலக்கெடுவில் மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஆவணங்கள் மற்றும் உரிமைக் கோரிக்கைகளை முழுமையாக ஆய்வு செய்யவேண்டும்.மாற்று இடம்மற்றும்மறுவாழ்வு ஏற்பாடுகள் இல்லாமல் எந்தக் குடும்பத்தையும் அப்புறப்படுத்தக்கூடாது. குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் உள்ளிட்டோரின் வாழ்வாதார பாதிப்பை அரசு தனியாகமதிப்பீடுசெய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுடன் அதிகாரிகள் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். சட்டப்படி தகுதி உள்ள குடும்பங்களுக்கு பட்டா மற்றும் குடியிருப்பு உரிமை வழங்குவதற்கான வாய்ப்புகளை ஆராய வேண்டும்.

ஏற்கெனவே வசித்து வரும் மக்களின் நிலை குறித்து வெளிப்படையான முறையில், பொதுமக்கள் முன்னிலையில் விசாரணை நடத்த வேண்டும். "மக்கள் வளர்ச்சிக்காக அரசு; மக்கள் வெளியேற்றத்திற்காக அல்ல!"

அரசின் எந்த நடவடிக்கையும் மக்களின் நலனை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும். வளர்ச்சி, நீர்நிலைப் பாதுகாப்பு அல்லது சட்ட அமலாக்கம் என்ற பெயரில் ஏழை மற்றும் சாதாரண மக்களின் குடியிருப்பு உரிமையைப் பறிப்பது சமூகநீதிக்கு எதிரானது.

எனவே, தமிழக அரசு இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு, 5,000-க்கும் மேற்பட்ட குடும்பங்களின் அச்சத்தைப் போக்க வேண்டும். மாற்று ஏற்பாடுகள் மற்றும் உரிய மறுவாழ்வு உறுதி செய்யப்படும் வரை எந்தவிதமான கட்டாய வெளியேற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

"மக்களின் கண்ணீரில் எந்த வளர்ச்சியும் கட்டமைக்கப்படக் கூடாது. மக்களின் வாழ்வுரிமை காக்கப்பட வேண்டும்; வீட்டுரிமை பாதுகாக்கப்பட வேண்டும்;மனிதநேயம் நிலைநாட்டப்பட வேண்டும்" என

நிறுவனத் தலைவர், தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்புதூத்துக்குடி சம்சுதீன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# குமரியில் காதல் மோசடியில் ஈடுபட்டவர் கைது



கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே காதல் வலையில் வீழ்த்தி பெண்கள் மற்றும் மாணவிகளிடம்நகை,பணத்தைமோசடி செய்தஜெனிஷ் என்பவரைப் போலீசார் கைது செய்தனர்,பாதிக்கப்பட்ட பெண்அளித்தபுகாரின்பேரில்அமைக்கப்பட்டதனிப்படை போலீசார் இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்தனர்.

விசாரணையில், இவர் அபகரித்த நகைகளை விற்று ஆம்னி பஸ் மற்றும் 2 கார்களை வாங்கி வாடகைக்கு விட்டு வந்தது தெரியவந்தது.

# குடிபோதையில் கார் ஓட்டிய 14 பேர் சிக்கினர்




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் போக்குவரத்து காவல் ஆய்வாளர் அருண் தலைமையில் நேற்றிரவு நடத்தப்பட்ட வாகன சோதனையில், குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக டாக்டர், 5 தொழிலதிபர்கள் மற்றும் 3 பொறியாளர்கள் உட்பட 14 பேர் பிடிபட்டனர். நண்பர்களுடன் மதுவிருந்து முடித்து சொகுசு கார்களில் திரும்பியபோது சிக்கிய இவர்களின் 14 கார்களையும் காவல்துறையினர் பறிமுதல் செய்து வழக்குப் பதிவு செய்தனர்.

# ஈரோடு மாநகராட்சி கிரிக்கெட் போட்டி மண்டலம்-3 அணி சாம்பியன் பட்டம் வென்றது



80-வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, ஈரோடு மாநகராட்சி பணியாளர்கள் சார்பில் நடத்தப்பட்ட 2-ஆம் ஆண்டு கிரிக்கெட் போட்டி ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆகஸ்ட் 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இப்போட்டியில், மாநகராட்சியின் நான்கு மண்டலங்களைச் சேர்ந்த ப ணி ய ா ள ர் க ள் , அலுவலர்கள்,தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் உள்ளிட்டோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை ஆணையாளர் செந்தில்குமார் ரத்தினம், மாநகர நல அலுவலர் டாக்டர் கௌரி சரவணன் உள்ளிட்ட அதிகாரிகளின் தலைமையில் ே ப ா ட் டி க ள் ந டை ெ ப ற் ற ன . விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் சிறப்பாக விளையாடிய ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. வெற்றி பெற்ற அணிக்கு பரிசுக் கோப்பை யும், வீரர்களுக்கு பாராட்டுகளும் வழங்கப்பட்டன.

மாநகராட்சி பணியாளர்களிடையே ஒற்றுமை, நட்பு மற்றும் விளையாட்டுஆர்வத்தை வளர்க்கும் வகையில் நடைபெற்ற இப்போட்டி அனைவரின் பாராட்டையும் பெற்றது.

# ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் புறநோயாளிகளுக்கு அன்னதானம்



ஈரோடு மாவட்டம் சித்தோடு ஸ்ரீ கஞ்சமலை சித்தர் சன்மார்க்க சங்கம் மற்றும் வீ த லீடர்ஸ் அமைப்பு இணைந்து, நேற்று (17.08.2026) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை புறநோயாளிகளுக்கு அன்னதானம் வழங்கினர். இந்நிகழ்வில் சன்மார்க்க சங்க நிறுவனர் செல்லதுரை,சங்க நிர்வாகிகள் குமார்,ரத்னாதேவி மற்றும் வீ லீடர்ஸ் அமைப்பின் தன்னார்வலர்கள் அண்ணாதுரை, த.ஆ.சுபஸ்ரீ உள்ளிட்டோர் கலந்து கொண்டு அன்னதானப் பணியில் ஈடுபட்டனர்.

### கோவையில் தேசிய அளவிலான மிகபெரிய அளவில் நடத்தபடும்

# குதிரையேற்ற லீக் போட்டிகள்; இந்தியாவின் முன்னணி குதிரையேற்ற வீரர்கள் பங்கேற்க உள்ளனர்

### ஆகஸ்ட் 28ம் தேதி முதல் 30 ம் தேதி வரை நடைபெற உள்ளது




இக்வைன்ஸ்போர்ட்ஸ் இந்தியா கூட்டமைப்பு மற்றும் இன்டிஜீனஸ் ஹார்ஸ் சொசைட்டி தமிழ்நாடு ஆகிய அமைப்புகள் இணைந்து, இக்வெஸ்ட்ரியன் சாம்பியன்ஸ் லீக் எனும் இந்தியாவின் மிகபெரிய குதிரை தடை தாண்டும் போட்டிகளை கோவையில் வரும் ஆகஸ்ட் 28ம் தேதி முதல் 30 ம் தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளனர். இப்போட்டியின் இரண்டாம் சீசனுக்கான அறிமுக நிகழ்ச்சி கோவை கொடிசியா அருகே உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது. அப்பொழுது ஈக்வெஸ்ட்ரியன் ,எஸ்.என். ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அறிமுகம் செய்தார். விழாவில் ஈக்வைன் ஸ்போர்ட்ஸ் இந்தியா பெடரேசன் தலைவர் சக்தி பாலாஜி, நிகழ்ச்சி குறித்து எடுத்து கூறினார். இதில் சென்னை புல்ஸ் அணியை சேர்ந்த பாரத் மனோகரன், பெங்களூர் நைட்ஸ் சனியைச் சேர்ந்த திலீப், கொல்கொண்டா சார்ஜர்ஸ் அணியைச் சேர்ந்த நவீன், பெகாசஸ் ஸ்போர்ட்ஸ் அணியை சேர்ந்த கிருஷ்ணா, மற்றும் எலைட் ஈக்வெஸ்ட்ரியன்ஸ் அணியை சேர்ந்த பாலமுருகன், ஆகியோர் கலந்து கொண்டனர். மூன்று நாட்கள் கோவையில் நடைபெற உள்ள இந்த போட்டிகள், வெள்ளைனைபட்டியை அடுத்த மோளப்பாளையம் பகுதியில் பிசைட் தி பவர் ஹவுஸ் எனும் தனியார் மைதானத்தில் நடைபெற உள்ளது. தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சக்தி பாலாஜி கூறியதாவது..

மு ன் ன ணி குதிரையேற்ற வீரர்கள் தங்களது திறமைகளை ஷோ ஜம்பிங் போட்டிகளில் வெளிப்படுத்துவதற்கான தொழில்முறை தளத்தை உருவாக்குவதுடன், இந்தியாவில் குதிரையேற்ற விளையாட்டு போட்டிகளில் வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் நடத்த படுகின்றது என்று தெரிவித்தார். இந்த ஆண்டு 6 மாநிலங்கில் இருந்து வீரர்கள் களமிறங்க உ ள் ள த ா க வு ம் , புதுடில்லியை சேர்ந்த சர்வதேச குதிரையேற்ற கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட நடுவர் முன்னிலையில், 110 சென்டிமீட்டர்,120 சென்டிமீட்டர் என இரு பிரிவுகளாக போட்டிகள் நடைபெற உள்ளது இதில் மொத்தமாக 30 லட்சம் பரிசுகள் வழங்க பட உள்ளது என தெரிவித்தார்.

# முரசொலி மாறனின் 93வது பிறந்தநாள்: ஈரோட்டில் திமுக சார்பில் மரியாதை



முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் 93-வது பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி, பெரியார் நகரில் உள்ள முகாம் அலுவலகத்திலும், தொடர்ந்து மணல்மேட்டில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்திலும் மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அந்தியூர் ப.செல்வராஜ், வீரமணி ஜெயக்குமார், ஆ . செ ந் தி ல் கு ம ா ர் , மு . சு ப் பி ர ம ணி ய ம் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி, திண்டல் குமாரசாமி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### 24 கேரட் தங்க முலாம் பூசப்பட்ட நகைகளுக்கான இந்தியாவின் முதல் பிரீமியம் பிராண்டாக திகளும்

## மந்தாரா கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில்

# அழகிய பிரம்மாண்ட நகைகளுக்கான புதிய கிளையை திறந்துள்ளது



நகை தயாரிப்பில் 26 ஆ ண் டு க ளு க் கு ம் ே ம ல ா ன நி பு ண த் து வ த் ை த கொண்டுள்ள, மந்தாரா நிறுவனம்,பைன்கோல்ட் வெர்மெயில் எனும் 24 காரட்தங்க முலாம் பூசப்பட்ட நகைகளுக்கான புதியகிளை,கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் துவங்கபட்டது இதனை ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தலைவர் கிருஷ்ணன் திறந்து வைத்தார். திறப்புவிழாவை தொடர்ந்து இது குறித்து மந்தாரா நிறுவனத்தின் உரிமையாளர் பினு குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

கோவை விமான நிலையத்தில் ஏற்கனவே எங்களுக்கு ஒரு கிளை உள்ளது. எங்களின் இரண்டாவது கிளையாக இந்தகிளை,கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் இன்று திறக்க பட்டுள்ளது என்றார்.

நகை தயாரிப்பில் சுமார் 26 ஆண்டுகள் தனக்கு அனுபவம் உள்ளது, மந்தாரா நகைகள் தி ற ை ம ய ா ன கைவினைகலைஞர்களின், தயாரிப்பில் உருவாக்கபட்ட 24 காரட்தங்க முலாம் பூசப்பட்ட, அழகிய நெக்லஸ்கள், வளையல்கள், மோதிரங்கள், கம்மல்கள், ஜி மி க் கி க ள் , பிரேஸ்லெட்கள், திருமண நகைகள், பேஷன் நகைகள், உள்ளிட்ட கலெக்ஷன்கள் தயாரிக்க பட்டு விற்பனை செய்ய படுகின்றது. மேலும் உங்களது பூஜை அறையில் வைப்பதற்கான தெய்வங்களின் சிலைகள் தத்ரூபமாக தங்க முலாம் பூசப்பட்டு வடிவமைக்க பட்டுள்ளது என்றார். தொடர்ந்து உயர்ந்து வரும் தங்கத்தின் விலை உயர்வால் பலதரப்பட்ட பெண்களும், கவரிங் நகைகளுக்கு விருப்பம் தெரிவித்து வரும் நிலையில், கவரிங் நகைகளை அணிவதால், அலர்ஜி, அரிப்பு, மற்றும் கருத்து போதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேரிடும் நிலை இருந்து வருகின்றது. இவற்றை கருத்தில் கொண்டு இந்த வகை நகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது,

இது கருக்காது, தோலில் அறிப்பை ஏற்படுத்தாது, நீடித்த தரத்தை வழங்கும் கவரிங் நகைகளாக அமைந்துள்ளது இதனால் இது பெண்களின் வரப்பிரசாதமாக இந்த வகை நகைகள் அமையும் என்று தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் மந்தாரா நிறுவனத்தின் இணை நிறுவனர் ஸ்ருதி பினு குமார் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வனத்துறையினரால் தமிழர்கள் மூன்று பேர் சுட்டு கொலை; காயல் அப்பாஸ் கடும் கண்டனம்



வனத்துறையினரால் தமிழர்கள் மூன்று பேர் சுட்டுபடுகொலைசெய்ய பட்ட சம்பவத்திற்கு மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் கடும் கண்டனத்தை தெரிவித்து உள்ளார். இது குறித்து அவர் வெ ளி யி ட் டு ள் ள அ றி க் ை க யி ல் கூறியிருப்பதாவது.

கர்நாடக மாநிலம் , சாம்ராஜ் நகர் மாவட்டம் ,ஹானூரில் உள்ள மரிமங்கலத்தில் வசித்து வரும் அந்தோணிசாமி, ஜான் ரோஸ் பீட்டர்,மற்றும் ஜெபஸ்டின் டேவிட் குமார்,


ஆகிய மூன்று பேரும் அவர்களது மாட்டை காணவில்லை என்று வன பகுதியில் தேடி பார்த்து வந்த நிலையில் இரவு நேரமாக ஆனதால் அவர்கள் எங்கே உறங்கி கொண்டிருந்த போது வனத்துறை அதிகாரிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் தமிழர்கள் மூன்று பேரும் சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார் என்கிற செய்தி மிகுந்த வேதனையை அளிக்கிறது.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மூவரும் வேட்டையில் ஈடுபட்டதாகவும் வனத்துறை அலுவலர்களை தாக்கியதாகவும் அவர்களிடம் துப்பாக்கி மற்றும் மான் இ ை ற ச் சி மீ ட் க ப் ப ட் ட த ா க வு ம் வனத்துறையினர் தெரிவித்தனர். மேலும் உயிரிழந்த மூன்று பேர் மீது இது மாதிரியான பழியை போட்டு சட்டத்திலிருந்து தப்பி விடாலாம் என்கிற முயற்சியில் வனத்துறையினர். ஏனென்றால் உயிரிழந்த மூன்று பேரும் வனத்துறையினர் சொல்வது போல் இந்த தவறு செய்திருந்தால் அவர்களை பிடித்து சட்டத்திற்கு முன் ஒப்படைக்கவேண்டுமேதவிர அதை விட்டுட்டு சூட்டு கொள்வதற்கு வனத்துறையினருக்கு யாரு கொடுத்தது இந்த அதிகாரம்.

எனவே : உயிரிழந்த மூன்று பேரின் குடும்பத்திற்கு தலா ரூ 50 லட்சமும் அவர்களின் குழந்தைகளின் கல்வி போன்ற எதிர்கால அனைத்து செலவுகளையும் கர்நாடகா அரசு பொறுப்பு ஏற்க வேண்டும். மேலும் தமிழர்கள் மூன்று பேரின் மரணத்திற்கு நீதி கிடைக்கும் வகையில் சம்பந்த பட்ட வ ன த் து ை ற யி ன ரி ட ம் முழுமையான விசாரணையை மேற்கொண்டு வழக்கு பதிந்து கைது செய்வதுடன் நிரந்தர பணியிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும் என கர்நாடகா அரசை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியிள்ளார்.

# 'Conduct audit of all exam processes, take corrective steps': Centre to NTA after 2 major exams disrupted this year

*The National Testing Agency (NTA) has been directed to conduct a thorough audit of all exam processes and submit a report on the corrective action taken, the Union education ministry said on Monday. The development came a day after the agency cancelled the University Grants Commission National Eligibility Test (UGC-NET) exams for English, commerce and sociology following a raft of factual, typographical and translation errors in the question papers. Two months ago, the premier testing agency scrapped the May 3 NEET-UG examination after a paper leak.The order to the NTA was issued at a meeting chaired by Union education minister Pralhad Joshi. "Education Minister Shri @JoshiPralhad held a meeting with the Secretary, Department of Higher Education, DG @NTA_Exams, and other senior officials. The Minister was apprised on the steps taken by NTA in the wake of recent issues, particularly with reference to reforming the overall system," the ministry posted on X." NTA has been directed to conduct a thorough audit of all exam processes and submit a report on corrective action taken," it added.*




Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.